**இந்திய உச்சநீதிமன்றம்**

தேதி: 02.09.2020

அமர்வு

மாண்புமிகு நீதியரசர் திரு.N.V. ரமணா

மாண்புமிகு நீதியரசர் திரு.S. அப்துல் நஷீர்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு.சர்சூர்யா காந்த்

குற்றவியல் மேல்முறையீடு எண். 1285 /2010

இளங்கோவன் ... மேல்முறையீட்டாளர்

/ எதிர் /

தமிழ்நாடு அரசு,

காவல்நிலைய ஆய்வாளர்

மூலமாக. ... எதிர்மேல்முறையீட்டாளர்

**தீர்ப்புரை**

மாண்புமிகு நீதியரசர் திரு. N.V. ரமணா:

1. இந்த மேல்முறையீட்டாளர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் 06.01.2010 தேதியிட்ட தீர்ப்பினை எதிர்த்து இந்த மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டில், மேல்முறையீடு பகுதியாக அனுமதிக்கப்பட்டு,

இந்திய தண்டனைச் சட்டம் 302 பிரிவின் கீழ் இந்த மேல்முறையீட்டாளர்/ எதிரியினுடைய மேல்முறையீடு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, இ.த.ச. பிரிவு 302-ஐ மாற்றி ஒன்றாக இ.த.ச. 304 பகுதி 2-ன் கீழ் மாற்றி அமைத்து, 5 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையுடன், அபராதமும் விதித்து மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டது. மேல்முறையீட்டாளர் மீது இ.த.ச. 324 பிரிவின் கீழ் உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தண்டனை உறுதி செய்யப்பட்டு, மேற்கூறிய இரு தண்டனைகளும் ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டுமென உத்தரவிடப்பட்டது.

2. <u>இந்த மேல்முறையீட்டை முடித்து வைக்க தேவையான சங்கதிகள் பின்வருமாறு</u>:-

புகார்தாரருடைய சகோதரருக்கு எதிரியினுடைய 4 ஆம் மகளுடன் தவறான தொடர்பு இருந்து வந்தது. இதன் காரணமாக இரு குடும்பத்திற்கும் இடையே விரோதம் ஏற்பட்டது. கடந்த 26.01.2002 ஆம் தேதி எதிரிகள் புகார்தாரருடைய வீட்டிற்கு முன்பாக வந்தார்கள். ஆதலால் இரு தரப்பினருக்கிடையே சண்டை ஏற்பட்டது. இப்பொழுது உள்ள மேல்முறையீட்டாளர் புகார்தாரரை இரும்பு கம்பியை கொண்டு தாக்கியும், குற்றம் சாட்டப்பட்ட மற்ற 3 நபர்கள் இதர குடும்பத்தை சேர்ந்த நபர்களை கம்பைக் கொண்டும் தாக்கினார்கள். இறந்துபோன நபர், சத்தத்தை கேட்டு தலையீடு செய்வதற்கு முயற்சி செய்த

பொழுது இந்த மேல்முறையீட்டாளர் அவரை தலையில் இரும்பு கம்பியால் தாக்கியதால் அவருடைய இறப்பில் முடிந்தது.

3. விசாரணை நீதிமன்றம் மேல்முறையீட்டாளரை இ.த.ச. பிரிவு 324 மற்றும் 302 பிரிவுகளின் கீழ் முறையே இரண்டு ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும், ஆயுள் தண்டனையும் விதித்து தீர்ப்பு அளித்தது.

மற்ற எதிரிகளின் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று விடுதலை செய்யப்பட்டார்கள். மேல்முறையீட்டில் உயர்நீதிமன்றம் இ.த.ச. 302 பிரிவில் வழங்கப்பட்ட தண்டனையை மாற்றி இ.த.ச. 304 பிரிவு பகுதி 2-ன் கீழ் தண்டனை வழங்கியது. ஏனென்றால் மேல்முறையீட்டாளருடைய வழக்கானது இருதரப்பினருக்கிடையே தானாக ஏற்பட்ட சண்டை என்பதினால் இ.த.ச. 300-ல் உள்ள விதி விலக்கு நாளின் கீழ் இவ்வழக்கு பொருந்தகூடியது என்பதால்.

4. மேல்முறையீட்டாளர்/எதிர் தரப்பு மற்றும் தமிழ்நாடு அரசு தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர்களுடைய வாதங்கள் இன்று விரிவாக கேட்கப்பட்டது.

5. மேல்முறையீட்டாளர்/எதிரியுடைய கற்றறிந்த வழக்கறிஞரின் வாதத்தில் இறந்து போன நபருடைய உறவினர்களுடைய சாட்சியத்தின் அடிப்படையில் மட்டுமே மேல்முறையீட்டாளருக்கு தண்டனை வழங்கியது தவறு என்றும்,

சந்தேகத்தின் பலனை மேல்முறையீட்டாளருக்கு வழங்கி விடுதலை செய்திருக்க வேண்டுமென்றும், குறிப்பாக விசாரணை நீதிமன்றம் மற்ற எதிரிகளைப் பொறுத்து அரசு தரப்பு வழக்கை நம்பாமல் மேற்படி எதிரிகளை விடுதலை செய்துள்ளது.

6. ஆனால், அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் உயர்நீதிமன்றம் கோப்பில் உள்ள அனைத்து சாட்சியத்தை பரிசீலனை செய்து ஒரு நல்ல காரணத்தோடு தீர்ப்பு வழங்கியதில் எவ்வித மாற்றமும் செய்ய வேண்டியதில்லை என்று வாதம் செய்தார்.

7. மேல்முறையீட்டாளர் தரப்பில் செய்த முதல் வாதத்தைப் பொறுத்து உறவினர்கள் அல்லது அக்கரையுள்ள சாட்சிகளுடைய சான்றுரையை கூடுதல் கவனத்துடன் பார்க்க வேண்டுமென ஏற்கனவே ஏற்பட்ட தீர்வு சட்டம் ஆகும். (**சுதாகர் எதிரிடை அரசு** (2018) 5 SCC 435) நீதிமன்றத்திற்கு மேற்படி சாட்சியங்களை நம்பத்தக்கது இல்லை என்று முடிவு செய்வதற்கு மேல்முறையீட்டாளர் தரப்பில் தகுந்த காரணங்கள் சொல்லாமல் மேற்படி சாட்சிகளுடைய சாட்சியங்களை உறவினர்களுடையது என்ற அடிப்படையில் மட்டும் ஏற்றுக்கொள்ள கூடாது என்று சொல்லியுள்ளது ஏற்க கூடியதாக இல்லை.

8. மேல்முறையீட்டாளர் தரப்பு வழக்கறிஞர் மற்ற எதிரிகளுக்கு வழங்கிய சந்தேகத்தின் பலனை இந்த எதிரிக்கும் வழங்கியிருக்க வேண்டுமென்று அடுத்த வாதம் எடுத்து வைத்தார். அவருடைய வாதத்தில் உடன் எதிரி விடுதலை செய்யப்பட்டு இருப்பதனால் இந்த மேல்முறையீட்டாளரையும் விடுதலை செய்திருக்க வேண்டுமென்றும் வாதம் செய்தார். ஆனால் அவ்வாறு எந்தவித சட்டமும் இல்லை. உடன் எதிரி விடுதலை செய்யப்பட்டதால் தானாக மற்றொரு எதிரியும் விடுதலை செய்ய வேண்டுமென்ற அவசியம் இல்லை. மேற்படி தீர்வு சட்டப்படி சட்ட விரோதமானது என இந்நீதிமன்றத்தால் பல தீர்ப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(***யானாப் ஷேக் எதிரிடை மேற்கு வங்காளம் மாநிலம்*** *(2013) 6 SCC 428*) என்ற வழக்கில் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் :

> "24. . . . **அரசு தரப்பு எதிரியின் மீது உள்ள குற்றத்தைப் பொறுத்து கூர்மையான, நம்பத்தக்க சாட்சியம் இருந்து உடன் எதிரி விடுதலை செய்யப்பட்டதினால் தானாக மற்றொரு எதிரியும் விடுதலை செய்ய வேண்டியதில்லை..** அரசு தரப்பு வழக்கு முழுவதும் பலவீனமும் முரண்பாடுகளும் இருந்து, வழக்கை நிரூபிக்க முடியவில்லை என்றால் உடன் எதிரி விடுதலை செய்யப்பட்டதை கணக்கில் எடுத்துக் கொள்ள பொருத்தமாக இருக்கும்.
>
> **(முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது)**

9. இந்த மேல்முறையீட்டாளருக்கு எதிராக அளிக்கப்பட்ட சாட்சியங்களுடன் விடுதலை செய்யப்பட்ட எதிரிகளுக்கு எதிராக அளிக்கப்பட்ட வாய்மொழி சாட்சியங்களை ஒப்பிட்டு பார்க்க வேண்டியது அவசியமாக உள்ளது. கீழமை நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை பார்வையிட்டதில் இந்த மேல்முறையீட்டாளர்/எதிரியின் மீது அளிக்கப்பட்ட சாட்சியத்தினுடைய தன்மையில் உடன் எதிரிக்கு எதிராக அளித்துள்ள சாட்சியமோடு மாறுபட்டு உள்ளது. கீழமை நீதிமன்றம் மற்ற உடன் எதிரிகளாக அத்தை (2 வது எதிரி), தாயார் (3 வது எதிரி) மற்றும் இந்த மேல்முறையீட்டாளருடைய தாத்தா (4 வது எதிரி) ஆகியோர்கள் ஆகும் எனக் குறிப்பிட்டுள்ளது. நீதிமன்றம் 4 வது எதிரி 70 வயது முதியவர் என்றும், அவரால் நேராக நிற்க முடியாது என்பதினால் அவரால் தன்னிச்சையாக காயம்பட்ட நபருக்கு காயங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை என்று கருதி உள்ளது. இரண்டாவது மற்றும் மூன்றாவது எதிரியினுடைய குற்றத்தை பொறுத்து விசாரணை நீதிமன்றம் அவை மிகைப்படுத்தப்பட்டுள்ளது என்றும், அவர்களை புகாரில் சேர்க்கப்படவில்லை என்றும் கூறியுள்ளது. மேலும், விசாரணை நீதிமன்றம் 2 முதல் 4 எதிரிகள் வரை சம்பவ இடத்தில் இருந்ததாகவும், அவர்கள் சாட்சிகளுக்கு காயத்தை ஏற்படுத்தினார்கள் என்பதற்கும் நேரில் கண்ட சாட்சிகளின் வாக்குமூலங்களில் உறுதியான ஆதாரம் இல்லை என்றும் முடிவு செய்துள்ளது.

10. மறுபுறம், மேல்முறையீட்டாளரைப் பொறுத்தவரை, அவருக்கு எதிரான ஆதாரங்கள் நிலையானவை என்றும், நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட புகார்கள் மற்றும் காவல்துறையின் முன் அளிக்கப்பட்ட அறிக்கைகளுக்கு ஏற்ப உள்ளன. இந்த மேல்முறையீட்டாளர் தான் இந்த வழக்கில் முக்கிய எதிரி ஆவார். இவர் தான் புகார்தாரரை தாக்கி அவருக்கு காயங்கள் ஏற்படுத்தியும், இறந்துபோன நபரை தலையில் இரும்பு கம்பியைக் கொண்டு தாக்கி அவருக்கு இறப்பை ஏற்படுத்தியுள்ளார். மேல்முறையீட்டாளர் மீதான குற்றச்சாட்டுக்கள், குற்றப்பத்திரிகை மற்றும் புகார்தாரர் தொடர்பான காயச்சான்றிதழ் மற்றும் இறந்துபோன நபருடைய பிரேத பரிசோதனை அறிக்கை ஒன்றுக்கொன்று ஒத்து போகும் விதத்தில் உள்ளது. மேற்கூறிய காரணத்தினால் விசாரணை நீதிமன்றம் இந்த மேல்முறையீட்டாளர் மீதுள்ள அரசு தரப்பு வழக்கு மற்றும் உடன் எதிரியினுடைய வழக்கை வித்தியாசப்படுத்தி உள்ளது. அதனால் அதில் உள்ள முடிவில் தலையிடுவதற்கு எவ்வித காரணங்களும் இல்லை என்றது .

11. மேல்முறையீட்டார் வழக்கறிஞர் இறுதியாக தன்னுடைய வாதத்தில், சாட்சிகள் இணை குற்றவாளிகள் தொடர்பாக நம்பாத நிலையில், தற்போது குற்றம் சாட்டப்பட்டவர்கள் தொடர்பான அவர்களின் சாட்சியங்களும் நிராகரிக்கப்பட வேண்டும் என்றும் தன்னுடைய வாதத்திற்கு ஆதரவாக ஒரு விஷயத்தில் பொய் என்றால், எல்லா விஷயத்திலும் பொய் என்ற சட்டப்பூர்வ

கோட்பாட்டை இந்திய நீதிமன்றங்கள் ஏற்றுக்கொள்வதற்கு தயக்கம் காட்டுகிறது என்றார் .

இந்நீதிமன்றம் 1957-ல், மூவர் அடங்கிய அமர்வில் ***நிஷார் அலி எதிரிடை உத்தரபிரதேஷ் மாநிலம், AIR 1957 SC 366*** என்ற தீர்ப்பில் கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

9. சாட்சிகள் பொய்யாக குத்ரத் உல்லா என்பவரை வேண்டுமென்றே ஈடுபடுத்தியுள்ளார்கள். அதன் காரணமாக, மேல்முறையீட்டுக்கு எதிரான சாட்சிகளின் சான்றுரைகளும் நீதிமன்றம் நிராகரித்திருக்க வேண்டும்.

நன்கு அறியப்பட்ட "ஒரு விஷயத்தில் பொய் என்றால், எல்லா விஷயத்திலும் பொய் என்ற சட்டப்பூர்வ கோட்பாடு மேல்முறையீட்டாளரால் நம்பப்பட்டது. சாட்சிகள் கத்தியை மேல்முறையீட்டாளரிடம் கொடுக்கப்பட்டதை கீழமை நீதிமன்றதங்கள் நம்பவில்லை. உயர்நீதிமன்றம் இந்த மேல்முறையீட்டாளருக்கு தண்டனை கொடுப்பதற்கு இந்த சாட்சிகளை ஏற்று இருக்கக்கூடாது என்றும் வாதம் செய்யப்பட்டது. **இந்த கோட்பாடு இந்தியாவில் உள்ள பல நீதிமன்றங்களில் எந்த ஒரு அங்கீகாரமும் வழங்கவும் இல்லை, இது ஒரு சட்டத்தின் விதியாக ஒரு இடத்தை எடுத்துக்கொள்ளவும் இல்லை. இது எச்சரிக்கையின் விதி மட்டுமே ஆகும். இது போன்ற சந்தர்ப்பங்களில்**

**சான்றுரை புறக்கணிக்கப்படலாம் மற்றும் அது புறக்கணிக்கப்பட வேண்டும் என்பதல்ல.**

அமெரிக்க எழுத்தாளர் ஒருவர் கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்:-

*"...இந்த கோட்பாடானது மதிப்பற்றது. முதலாவதாக அதன் செல்லுபடியாகும் தன்மையிலும், இரண்டாவதாக அதன் பயன்பாட்டு வகையிலும் எடுத்துக் கொண்டால் இந்த கோட்பாடு நடுவர்க்கு சொல்ல வருவது என்னவென்றால், அவர்கள் எந்த ஒரு நிகழ்விலும் எதை செய்யலாம், அவர்கள் எதை கண்டிப்பாக செய்ய வேண்டும் அல்லது செய்யக்கூடாது என்பதாகும். ஆக மொத்தத்தில் இந்த கோட்பாடு ஒரு மிகைப்படுத்தப்பட்ட வார்த்தை குவியலே. நடைமுறையில் இது ஒரு தீங்கு விளைவிப்பதே ஆகும்..." (விங்மோர் ஆன் எவிடென்ஸ், பாகம். III, பக்கம் 1008)*

10. "... **இந்த கோட்பாடுகள் சாட்சியத்தினுடைய தன்மையை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எப்படி எடுத்துக்கொள்ளலாம் என்று தான் சொல்கிறதே தவிர இது சாட்சியத்தில் ஒரு கட்டாயமான விதி அல்ல.**

**(முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது)**

இந்த விதியை இந்நீதிமன்றம் தொடர்ந்து பின்பற்றி வருகிறது. சமீபத்தில் ***ரோக்டாஸ் எதிரிடை ஹரியான மாநிலம் (2019) 10 SCC 554***ல்

குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை திரும்ப வலியுறுத்த வேண்டிய அவசியம் இல்லை.

12. விசாரணை நீதிமன்றம் மேலே கூறியவாறு மற்ற உடன் எதிரிகளை பொறுத்து சாட்சிகளுடைய சான்றுரை சாட்சியத்தை நம்பாமல் அவர்களுக்கு சந்தேகத்தின் பலனை அளித்தும், இந்த மேல்முறையீட்டாளரைப் பொறுத்து சாட்சிகளுடைய சாட்சியத்தை வைத்து தண்டனை வழங்கியுள்ளது. விசாரணை நீதிமன்றத்தினுடைய முடிவில் எவ்வித தவறும் இல்லை.

13. உயர்நீதிமன்றம் முழு சாட்சியத்தை பரிசீலனை செய்தும், மேல்முறையீட்டாளர் தரப்பு வழக்கறிஞர் செய்த வாதத்தையும் கருத்தில் கொண்டு இரு பிரிவுக்கும் இடையே திடீரென சண்டை ஏற்பட்டதினால் அதில் இந்த மேல்முறையீட்டாளருக்கும் காயங்கள் ஏற்பட்டுள்ளது என்றும், மேல்முறையீட்டாளரும் புகார் மனு கொடுப்பதற்கு முயற்சி செய்துள்ளார் என்று காண்கிறோம். அதனால் மேற்கூறிய காரணத்தினால் உயர்நீதிமன்றம் மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்ட தண்டனையை மாற்றி அமைத்துள்ளது.

14. மேல்முறையீட்டாளர் தரப்பு வழக்கறிஞர் உயர்நீதிமன்றத்தினுடைய தீர்ப்பில் குறைபாடு உள்ளதை எதுவும் சுட்டிக்காட்ட முடியவில்லை. அதனால் இந்நீதிமன்றமும் உயர்நீதிமன்றத்தினுடைய தீர்ப்பில் தலையிடுவதற்கு எந்த

காரணமும் இல்லை என்ற முடிவு செய்தும், இந்த மேல்முறையீட்டில் எவ்வித நற்கூறும் இல்லை என்று முடிவு செய்து இந்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது.

15. மேல்முறையீடு தள்ளுபடி செய்ததை அனுசரித்து மேல்முறையீட்டாளருக்கு இந்நீதிமன்றம் 19.07.2010-ம் தேதி வழங்கிய பிணையை ரத்து செய்து, இவர் விசாரணை நீதிமன்றத்தில் ஆஜராகி மீதம் உள்ள சிறைதண்டனையை அனுபவிக்க வேண்டுமென்றும், தவறும் பட்சத்தில் காவல் அதிகாரிகள் அவரை மீதமுள்ள தண்டனை காலத்தை அனுபவிக்க காவலில் எடுக்க வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது.

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."